## படிப்படியான வழிகாட்டியைப்

சிங்கப்பூர்ச் சிற்பிகளின் நினைவகத்திற்கு ஒரு பொருள் மற்றும்/அல்லது கதையை சமர்ப்பிக்கும் ஆர்வம் உள்ளதா? கீழ்க்காணும் வழிகாட்டியைப் பின்பற்றுங்கள்!

1. 1950களிலிருந்து 1970கள் வரை உங்களின் அல்லது உங்கள் குடும்ப உறுப்பினரின் அனுபவங்களைப் பின்னோக்கிப் பார்ப்பதுடன் எங்களின் விருப்பப் பட்டியலையும் பார்த்து உங்களிடம் உள்ள பொருட்கள் மற்றும்/அல்லது கதைகள் பொது வேண்டுகோளுக்குப் பொருத்தமானதாக இருக்கும் என்று நினைத்துப்பாருங்கள்.

2. உங்களின் பொருள் மற்றும்/அல்லது கதையை மனதில் கொண்டு, https://go.gov.sg/shape-our-memorial தளத்தில் உள்ள சமர்ப்பிப்புப் படிவத்தை நிரப்புங்கள். பின்வரும் குறிப்புகள் படிவத்தை நிரப்ப வழிகாட்டும்:

   **"பிரிவு 1: உங்கள் பொருள் மற்றும்/அல்லது கதையைப் பகிர்ந்துகொள்ளுங்கள்" என்பதன் கீழ்**

   a. ஒரு பொருளையும் கதையையும் பகிர்ந்துகொள்கிறீர்களா அல்லது கதையை மட்டும்தானா என்பதைக் குறிப்பிடவும். ஒவ்வொரு தெரிவும் வேறு கேள்விகளுக்கு இட்டுச் செல்லும்.

   **"உங்களின் பொருள்/கதை நமது வரலாற்றுடன் எவ்வாறு பொருந்துகிறது" என்பதன் கீழ்**

   b. உங்களின் பொருள் மற்றும்/அல்லது கதை நமது வரலாற்றுடன் எப்படிப் பொருந்துகிறது என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள். அந்தப் பொருள்/கதை நமது முதல் தலைமுறைத் தலைவர்கள், நமது வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு மற்றும்/அல்லது தேசியக் கொள்கை போன்றவற்றைப் பற்றி உங்களுக்கு மேலும் கூறுகிறதா என்பதைக் குறிப்பிடுங்கள்.

   **"உங்கள் பொருள்/கதை எப்படி உங்களுக்கு முக்கியமானது" என்பதன் கீழ்**

   c. எப்படி உங்கள் பொருள் மற்றும்/அல்லது கதை உங்களுக்கு முக்கியமானது என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்களின் பொருள் மற்றும்/அல்லது கதை என்ன விழுமியத்தை (விழுமியங்களை) உங்களுக்கு நினைவுபடுத்துகின்றது எனக் கூறுங்கள்.

   **"உங்கள் பொருள் பற்றி எங்களுக்கு மேலும் சிறிது சொல்லுங்கள்" என்பதன் கீழ்**

d. நீங்கள் ஒரு பொருளைப் பகிர்ந்துகொண்டால், அதனைப் பற்றி எங்களுக்கு மேலும் சிறிது சொல்லுங்கள். அது எப்படி இருக்கிறது என்பதை எங்களுக்குக் காட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட புகைப்படங்களைப் பதிவேற்றம் செய்யுங்கள். நீங்கள் ஒரு கதையை மட்டும் பகிர்ந்துகொண்டால், நீங்கள் இந்தக் கேள்விகளைப் பார்க்க மாட்டீர்கள். இந்தக் கட்டத்தை நீங்கள் தவிர்த்துவிடலாம்.

**"பிரிவு 2: தனிப்பட்ட விவரங்கள்" என்பதன் கீழ்**

e. நீங்கள் சமர்ப்பித்ததை ஆய்வு செய்த பின்னர் நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்ள தயவுகூர்ந்து உங்களின் தொடர்புத் தகவலை அளியுங்கள்.

**இப்படிவத்தை நிரப்பிய பிறகு,**

f. பகிர்ந்துகொள்ள உங்களிடம் கூடுதல் பொருள்கள் மற்றும் அல்லது கதைகள் இருந்தால், https://go.gov.sg/shape-our-memorial -குத் திரும்பச் சென்று கட்டம் a-யிலிருந்து மீண்டும் தொடங்குங்கள்.

3. நன்றி! நீங்கள் வெற்றிகரமாக ஒப்படைத்திருக்கிறீர்கள். நீங்கள் வழங்கியவற்றை ஆய்வுசெய்ய எங்களுக்குச் சிறிது அவகாசம் கொடுங்கள். அதன் முடிவு குறித்துப் பின்னர் நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்ளுவோம். அதற்கிடையே, எங்களின் இணையவழிக் கண்காட்சியைப் பார்ப்பதுடன், இதுவரை பார்த்திருக்காவிட்டால் எங்களின் நடமாடும் கண்காட்சியையும் பாருங்கள்.